**செய்தி வெளியீடு எண்.738** **நாள்.20.10.2009**

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தின்**
**மூன்றாவது கூட்டம் – நாள்:- 20.10.2009.**

***************

அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கரை கொண்டுள்ள தமிழக அரசு, அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றியது. இச்சட்டத்தில் அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை உருவாக்கவும் அவற்றை செயல்படுத்துவதற்கென நல வாரியத்தை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டு 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கட்டுமானத் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், தையல் கலைஞர்கள், கைவினைத் தொழிலாளர்கள், பனைமரத் தொழிலாளர்கள், கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள், காலணி மற்றும் தோல்பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், ஓவியர்கள், பொற்கொல்லர்கள், மண்பாண்டத் தொழிலாளர்கள், வீட்டுப்பணியாளர்கள், விசைத்தறி நெய்யும் தொழிலாளர், பழங்குடியினர், தூய்மைப் பணிபுரிவோர், சீர்மரபினர், நரிக்குறவர், உலாமக்கள் மற்றும் பணியாளர்கள், மீனவர், அரவாணிகள், ஊனமுற்றோர், கிராமக் கோயில் பூசாரிகள், நாட்டுப்புறக் கலைஞர்கள், வணிகர்கள், விவசாயிகள், கம்பி வட தொலைக்காட்சி தொழிலாளர் ஆகிய தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கென தனித்தனியாக நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டது. ஜூலை 2009இல், விசைத்தறி தொழிலாளர்களுக்கும் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இதுவரை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1982–ன் கீழ் பல்வேறு தொழிலாளர்களுக்கு தனித்தனியாக 29 நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றில் கீழ்கண்ட 15 நல வாரியங்கள் தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது:-

| | |
|---|---|
| 1. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருந்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம் |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் |

| | |
|---|---|
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெய்யும் தொழிலாளர் நல வாரியம் |

இவ்வாரியங்களில் பதிவு செய்யும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு உருவாக்கி மிக சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

**<u>வாரியத்தால் பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு வழுங்கப்படும் நிதி உதவி விவரங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | விபத்து காப்பீடு திட்டம் | ரூ. |
| | அ. விபத்து இறப்பு | 1,00,000/– |
| | ஆ. விபத்து ஊனம் | ஊனத்தின் தன்மைக்கேற்ப |
| 2. | இயற்கை மரண உதவி | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவி | 2,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை | |
| | அ) 10ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஆ) 10ம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) 11ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ) 12ம் வகுப்பு படிப்பதற்கு (பெண்களுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) 12ம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) முறையான பட்டப் படிப்பு | 1,500/– |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 1,750/– |
| | எ) முறையான பட்ட மேற்படிப்பு | 2,000/– |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 3,000/– |
| | ஏ) தொழில்நுட்பப் பட்ட படிப்பு | 2,000/– |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 4,000/– |
| | ஐ) தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு | 4,000/– |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 6,000/– |
| | ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000/– |
| | விடுதியில் தங்கிப் படித்தால் | 1,200/– |
| 5. | திருமண உதவி | 2,000/– |
| 6. | மகப்பேறு உதவி | 6,000/– |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவி | 500/–க்கு மிகாமல் |

8. ஓய்வூதியம் 400/–

மேற்படி தொழிலாளர் துறையின் கீழ் செயல்படும் 15 நல வாரியங்களில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், ஆட்டோ மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம் தவிர பிற வாரியங்களில் மேற்படி நல திட்டங்களை செயல்படுத்த தமிழக அரசு தேவையான நிதியை வழங்கி வருகிறது. டாக்டர் கலைஞர் தலைமையிலான இந்த புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற 13.5.2006 முதல் 30.09.2009 வரை இந்நலத் திட்டங்கள் மூலம் 114 கோடி ரூபாய் உதவித் தொகையை தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாரியங்களில் (கட்டுமான தொழிலாளர் நல வாரியம் தவிர) இதுவரை 21,94,291 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். 5,79,340 பயனாளிகளுக்கு ரூ.128,49,39,972 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 13.5.2006 முதல் 30.9.2009 வரை 14,29,690 தொழிலாளர்கள் பல்வேறு நல வாரியங்களின் கீழ் பதிவு செய்துள்ளனர். 13.5.2006 முதல் 30.09.2009 வரை பல்வேறு நல திட்டங்களின் கீழ் 5,14,521 தொழிலாளர்கள் ரூ.114,98,09,028 அளவில் பயன்பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தை பொறுத்தவரை வாரியம் துவங்கப்பட்ட நாளிலிருந்து 30.09.2009 வரை 12,46,551 தொழிலாளர்கள் உறுப்பினராக பதிவு பெற்றுள்ளார்கள். 13.05.2006 முதல் 30.09.2009 வரையிலான காலத்திற்கு 2,57,626 தொழிலார்கள் ரூ. 57 கோடி அளவில் நலத்திட்டங்களின் கீழ் பயன்பெற்றுள்ளனர்.

இன்று, 20.10.2009 நடைபெற்ற தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தின் மூன்றாவது கூட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் திரு. தா. மே. அன்பரசன், அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். தொழிலாளர் ஆணையர் திரு அ. சுகுமாரன், இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. ப. கருப்பசாமி ஆகியோர்களும், வாரியச் செயலாளர் திரு. M. ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாரியக் கூட்டத்தில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் விரைந்து கிடைத்திடுவது குறித்தும், உறுப்பினர் பதிவு, பதிவை புதுப்பித்தல், திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள், மாவட்ட அளவிலான அலுவலகங்களை கணினி மூலம் ஒருங்கிணைக்கும் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் வாரிய நிர்வாக அலுவலர் திரு. M. பாஸ்கரன், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியச் செயலாளர் திரு. K. அழகேசன் மற்றும் தொழிலாளர் துறை அலுவலர்கள் வேலையளிப்போர் பிரதிநிதிகள் தரப்பில் திரு. கே. கோபால கிருஷ்ணன், திரு. டி. எம். ஜவஹர்லால், திரு. பி. அருள் பிரகாசம், திரு. எம். மணிகண்டன், திரு என். ஜெகதீசன், திரு சி. பாலசுப்பிரமணியன், ஆகியோர்களும், தொழிலாளர் பிரதிநிகள் சார்பில் திரு. எம். சண்முகம், திரு. கே. பழனிவேலு, திரு. என். திருநாவுக்கரசு, திரு. எஸ். துரைசாமி, திரு. தஞ்சை மதி, திரு. என். சம்பத் ஆகியோர்களும் கலந்துக் கொண்டனர். இக்கூட்டத்தில் அரசு தரப்பில் சமூகநலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

இன்று நடைபெற்ற கூட்டத்தில் உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம் தவிர தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நலவாரியம், தையல் தொழிலாளர் நலவாரியங்களின் கூட்டம் நடைபெற்றது. நாளை (21.10.2009) தமிழ்நாடு ஓவியர்கள் நலவாரியம், காலனி, தோல் பொருட்கள் செய்யும் நலவாரியம், பொற்கொல்லர் நலவாரியம் மற்றும் வீட்டு பணியாளர்கள் நலவாரியம் ஆகிய வாரியங்களின் கூட்டங்களும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

*************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.